IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 23/2016

Deposition of witness for prosecution : PW 13

Defense :

Name : டாக்டர் திரு. ஜெயப்பிரகாஷ்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.07.2023

**முதல் விசாரணை**

**1 ம் எதிரி இறப்பு. 2 முதல் 11 எதிரிகள் ஆஜர்.**

1. நான் தற்போது ஆரணி அரசுமருத்துவமனையில் சிவில் சர்ஜனாக பணி புரிந்து சென்ற மாதம் ஓய்வு பெற்றேன். கடந்த 23.03.2014 அன்று நான் ஆரணி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது தனசேகர், வயது 30, த/பெ துரைராஜ் முள்ளண்டிரம் கிராமம், ஆரணி தாலுக்காவை சேர்ந்தவர் தனக்குதானே ஆரணி அரசுமருத்துவமனைக்கு வந்து தனசேகர் என்பவரை 10 தெரிந்த ஆண் நபர்கள் 23.03.2014 அன்று இரவு 10.30 மணி அளவில் கத்தியாலும், பீர் பாட்டிலாலும், தடியாலும் தாக்கியதாகவும் தெரிவித்தார். மேற்படி சம்பவம் ஆரணி அரசமருத்துவமனை வளாகத்தில் நடந்ததாக தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது தெரிய வந்தது.

1. இடது பக்க மேல் கையில் 15x 3 செ.மீ அளவில் எலும்பு ஆழத்திற்கு கிழிந்த காயம் விளிம்புகள் சீராக இல்லாத நிலையிலும் ரத்தம் உரைந்தும் காணப்பட்டது.

2. இடது பக்க இடுப்பில் 3x 1/2 செ.மீ அளவில் கிழிந்த காயம் விளிம்புகள் சீராக இல்லாத நிலையிலும் ரத்தம் உரைந்தும் காணப்பட்டது.

3. இடது பக்க வயிற்றின் கீழ் பகுதியில் 5.5x 1 செ.மீ அளவில் கிழிந்த காயம் விளிம்புகள் சீராக இல்லாத நிலையிலும் ரத்தம் உரைந்தும் காணப்பட்டது.

4. தலையின் மீது 3x 1/2 செ.மீ அளவில் கிழிந்த காயம் சிவப்பாகவும் ரத்தம் உரைந்தும் காணப்பட்டது.

அவரை புற நோயாளியாக சிகிச்சை அளித்து அவரை மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. அங்கு அவர் 24.03.2014 அன்று உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார். 01.04.2014 அன்று சிகிச்சையிலிருந்து அவர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். 25.03.2014 அன்று அவருக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டது 24.03.2014 அன்று சி.டி.ஸ்கேன் எடுக்கப்பட்டது. சி.டி.ஸ்கேன் ரிப்போர்ட் படி அவருக்கு ஏற்பட்ட காயம் 1 முதல் 3 வரை சொற்பக்காயங்கள் என்றும், காயம் 4 கொடுங்காயம் என்றும் நான் கருத்துரை வழங்கினேன் நான் வழங்கிய கருத்துரையுடன் கூடிய விபத்துபதிவேட்டு நகல் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் காயம் பட்ட நபருக்கு முதல் உதவி மட்டும் தான் செய்தேன். காயம்பட்ட நபருக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிடப்பட்டுளள காயங்கள் நான் வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை ஆவணங்களின்படி வழங்கிய கருத்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள காயங்கள் மாறுபட்டு உள்ளதுஎன்றால் சரிதான். நான் எந்த ஆவணத்தின் அடிப்படையில் கருத்துரை வழங்கினேன் என்றால் காயம் பட்ட நபரின் டிஸ்சார்ஜ் சம்மரியை பார்த்து தான் கருத்துரை வழங்கினேன். காயம்பட்ட நபருக்கு வேலூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட எக்ஸரே ரிப்போர்ட், சி.டிஸ்கேன், ரிப்போர்ட் மற்றும் டிஸ்சார்ஜ் சம்மரி எதுவும் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது .

2. காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் கிழிந்த காயங்கள் என்றால் சரிதான். ஒரு நபர் கூர்மையான பொருளின் மீது மோதிக்கொள்ளும்போது காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட கிழிந்தகாயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

3. பொதுவாக ஆரணி அரசு மருத்துவமனை வளாகத்தில் சம்பவம் ஏதாவது நடந்தால் உடனடியாக காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்படும் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலில் அவ்வாறு சம்பவம் குறித்து காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். சொல்வது போல் சம்பவம் எதுவும் நடந்திருந்தால் விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் யாருடைய துணையும் இல்லாமல் தன்னிச்சையாகதான் சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் சிகிச்சைக்கு வந்த அன்று நான்தான் பணி மருத்துவர் என்றால் சரிதான். என்னுடைய பணியானது காலை முதல் மறுநாள் காலை வரை ஆனதாகும்.

4. பொதுவாக ஆரணி அரசு மருத்துவமனையில் 7,8 மருத்துவர்கள் வருவார்கள். இரவு மருத்துவர்கள் ஒன்று அல்லது இருவர்தான் வருவார்கள் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று இரண்டு மருத்துவர்கள் பணியில் இருந்தோம். என்னுடன் அன்றைய தேதியில் பணியில் இருந்த மருத்துவர் பெயர் நினைவில்லை. இரவு நேரத்தில் வாட்ச்மென் இருந்தாரா என்றால் இருந்தார். நான்கு செவிலியர்கள் இருப்பார்கள். துப்புரவு பணியாளர் ஒருவர் இருப்பார். மொத்தமாக இரவு நேரத்தில் 10 முதல் 15 ஊழியர்கள்

மருத்துவமனையில் பணியில் இருப்பார்கள் என்றால் சரிதான். அதேபோல் அவசர பிரிவில் சிகிச்சைக்கு வருபவர்கள் வந்து சென்றுக்கொண்டு தான் இருப்பார்கள்என்றால் சரிதான்.

5. பொதுவாக அரசு மருத்துவமனையில் தகாத சம்பவம் ஏதாவது நடந்தால் மருத்துவ மனை ஊழியாகள் உடனடியாக மருத்துவரிடம் தகவல் தெரிவித்து காவல் நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்படும் என்றால் சரிதான். சம்பவம் ஆரணி அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் நடந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

6. காயம் நான்கானது ஒருநபர் கூர்மையான ஒரு பொருளின்மீது இடித்துக்கொண்டால் அவ்வாறான கிழிந்தகாயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.